248

248

அதிகாரம் யாருக்கு?

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 FEB 1944
MADRAS

690

புதுமைப்பித்தன்

பவள முத்திரை

10 அணா

பவள முத்திரை : 1

அதிகாரம் யாருக்கு ?

248/1744

320

641

" புதுமைப்பித்தன் "

தமிழ் நாடு பிரசுரம் கம்பெனி

2-ஏ, பூந்தமல்லி ஹைரோட், பி. டி., சென்னை

முதற்பதிப்பு, ஜனவரி 1944

தேச பக்தியை நல்ல லாபம் தரும் சரக்காக மதித்து, செய்தி - வர்த்தகம் நடத்தத் தயங்காத முதலாளி - சுரண்டெலிகளின் திருகுதாள தாண்டவங்களை வெட்ட வெளிச்சமாக்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட பத்திரிகையாளர்களின் பிரசுரம். சமீபத்தில் ஒரு தமிழ் தினசரியிலிருந்து வெளியே வந்த பத்திரிகையாளர்கள் யாவரும் பிரதி மாதமும் ஒரு புஸ்தகம் எழுதுவார்கள்.

பதிப்புரிமை :

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்,
ஜி. டி., சென்னை.

முகப்புச் சாவி

இது அரசியல் சாஸ்திரத்தின் சகல அம்சங்களையும் பரிபூர்ணமாக விவாதிக்கும் புஸ்தகப் அல்ல. இதில் விடப்பட்ட விஷயங்கள் பல. சொல்லப்பட்டவற்றில், பாஷைத் தெளிவே பிரதான நோக்கமாக கொண்ட ஒரு முயற்சியே இது. சாத்தியமான வரை எதிர்மறை ரூபத்தில் சூத்திரபூர்வமாக லட்சண வரம்புகளை விவரித்துக்கொண்டு போவதே நோக்கம்.

அரசியல் கட்டுக்கோப்பு சோதனையில் லட்சியப் பேச்சுக்கு இடம் இல்லை.

கருணை என்ற வார்த்தையின் பொருள் இப்பொழுது கிழங்கு வர்க்கத்தில் அடங்கிவிட்டது. அரசியல் மண்ணில் அது முளைக்காவிட்டால் அதிசயம் இல்லை. முளைக்குமாகில், அதற்குக் காரணம் அரசியலின் தன்மை அல்ல. ஆகையால்தான் சாத்தியமானவரை கட்டுக் கோப்பின் அமைப்பு விவரத்தையும் அதன் திரிபுகளையும் மட்டும் விவரிக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது.

பரிபாஷை என்பது முதல் அதிகாரணமாக இருக்கவேண்டும் என்பதற்காக, வசனப்போக்கில் பின்னல்முறை அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

பரிபூர்ணமான அரசியல் நூல் ஒன்று சமைப்ப தற்கு இரண்டு வகையில் இது வழிகாட்டி. ஒன்று, இதில் சாதிக்க முயன்ற பரிசீலனைகள் யாவும் பூர்ண ஆராய்ச்சிக்கு பீடிகைகள் என்று கருதுகிறேன். இரண்டு: தர்க்க நியாயத்தின் போக்கை விரும்பாத வர்கள், வேறு முறைகளை சோதனை செய்து பார்க்க இது எதிர்மறையில் உதவி செய்யும்.

சிறு வீடுகட்டி விளையாடுவதுபோல, நாம் ஜன நாயக விளையாட்டு விளையாடுவதை நிறுத்தி, பூர்ண ஆதிபத்தியமுள்ள சர்க்காரை ஸ்தாபிக்க வகை செய்யும் வரை, மனிதன் இரண்டு காலால் நடப்பவன் என்று சொல்லுவதற்கு சமமாகவுள்ள சாதாரண அரசியல் கருத்துக்களைக்கூட தர்க்க நியாயத்தின் அந்தம்வரை சோதித்துச் செல்லமுடியாது. சோதித் துச் சென்றாலும், மனிதன் இரண்டு காலில் நடக் கும் பிராணிதானா என்று அதிசயப்பட்டு கேட்டுக் கொண்டிருப்பதற்கு கும்பல் கூடிவிடும்.

'புதுமைப்பித்தன்'

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 FEB 1944
MADRAS

அதிகாரம் யாருக்கு?

அரசியல் சாஸ்திரப் பயிற்சியினுல் ஒருவன் அரசியல்வாதியாகிவிட முடியாது; அரசியல் வாதியின் வேட்கைகளை பூர்த்திசெய்யும், அல்லது அவ்வாறு செய்யத்தவறும் சாதனங்களின் நுட்ப திட்பங்களையும், அவற்றின் வலுவையும் வசதியையும், புரிந்துகொள்ளுவதற்கு அரசியல் நூல் ஒருவாறு பயன்படலாம். புகுந்துள்ள காரியம் பயன்தரத்தக்க வகையில் நடைபெற உபயோகமாகக்கூடிய சாதனம் எது என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கு, அதன், அதாவது அக்கருவியின் பல்வேறு உறுப்புகளையும் அதன் சேர்க்கை வகைகளையும் பரிசோதிக்க வேண்டும். அதுவே அரசியல் சாஸ்திர நோக்கம்.

அரசியல் நூல் என்பது அரசின் அல்லது ஆட்சியின் தன்மையை அல்லது இயல்பை வகுத்துக்காட்டும் நூல். அரசு என்பது அரசன், ராஜன், என்ற பரம்பரிய வாரிசாகவரும் ஒருவனது பொதுச் சேவைத் தன்மையைக்குறிக்கும் ஒருபதம்; அதாவது அரசனது நிர்வாகம், அதிகாரம், அதிகாரவரம்புகள் அந்த அதிகாரத்துக்குரிய துணைக் கரணங்கள் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கும் ஒரு பதம். இப்

பொழுது இவ்வார்த்தைப் பிரயோகம், அரசனுடன் பூர்வத்தில்கொண்ட தொடர்பை அறுத்துகொண்டு ஆட்சி உட்பட மேலே குறிப்பிட்ட சகல அம்சங்களை மட்டும் குறிக்கிறது. இதனுல்தான் நாம் முடியரசு, குடியரசு, தனியரசு என்றெல்லாம் அரசு என்ற பதத்தை இணைத்து பலவிதப்பட்ட தன்மை வாய்ந்த நிர்வாக வர்க்கங்களை விவரிக்கிருேம்.

திருவள்ளுவர் மன்னராட்சிக்கு படை, குடி, கூழ், அமைச்சு என நான்கு உபலட்சணங்களை விவரிக்கிருர். அதுபோலவே அரசியல் சாஸ்திரத்திலும் அரசு என்பதற்கு உபலட்சணங்கள் விவரிக்கப் படுகின்றன. அவை தேசம், சமுதாயம், ஆதிபத்திய உரிமை உள்ள ராஜாங்கம், சர்க்கார் என்பவையாகும். சர்க்கார் என்ருல் சட்டம் இயற்றும் ஸ்தாபனம், அதை நிர்வகிக்கும் ஸ்தாபனம், அவ்வாறு எழும் சட்டங்களிடையே தோற்றக்கூடிய கலக்கங்களை தெளிவுபடுத்தி இன்னதற்குப்பொருள் இன்னதுதான் என்று நிர்த்தாரணம் செய்யும் ஸ்தாபனம் என்று பொருள். இவ்வுப லட்சணங்களின் உட்கிடைகளையும் சற்று தெளிவு படுத்திக்கொண்டால் பூர்வாங்கமாக பரிபாஷை இன்னது என்பதை தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

தேசம்: தேசமாவது என்ன? நீர்மேல் எழுத்துப்போல எல்லைவரம்புகள் உதாசீனம் செய்யப்படும் இக்காலத்தில், சர்வே உத்யோகஸ்தர் மாதிரி பிளான்போட்டுக் காட்டமுடியாது. அரசியல் சாஸ்திரத்தின் முடிபுகளுக்கு ஆதார விவகாரமான ஐரோப்பிய சரித்திரத்தைச் சற்றுக் கவனித்தால் இதன் உண்மை விளங்கும். உதாரணமாக போலந்து,

செக்கோஸ்லாவாகியா முதலிய நாடுகளை எடுத்துக் கொள்ளுவோம். பிறநாட்டு அரசியல் வாதிகளின் வெறிகளும் அபிலாஷைகளுமே அவற்றின் வரம்பை இதுவரை நிர்ணயித்து வந்துள்ளன. அவ்வையார் முற் காலத்தில் சர்வே செய்தது மாதிரியாக நிர்ணயமாகச் சொல்லியதுபோல, குறிப்பிட்ட எல்லையடக்கும் நிலப் பரப்பைவைத்து தேசம் என்ற பதத்துக்கு உள்ள பொருட் பொதிவு முழுவதையும் சொல்லுவதென்றால், அது பிசகான வழியிலேயே கொண்டுபோய்விடும். குறிப்பிட்ட ஆசாரம், பழக்கவழக்கங்கள், சமயவழிபாடு, பண்பு முதலியவற்றை வைத்து நிர்ணயிப்பது பொருந்தும் என மேலோட்டாகப் பார்த்தால் தெரிகிறது. குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் குறிப்பிட்ட ஆசார அனுஷ்டானங்களைமட்டும் கொண்டவர்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகிறார்களா என்று பார்த்தால், அவ்வளவு எளிமை யான கட்டுக்கோப்பு எங்குமே கிடையாது. இதை நாம் தேசம் என்ன என்பதை நிர்ணயிக்கும் குறி யீடாக வகுத்துக்கொண்டால், பூப்பரப்பில் உள்ள சகல தேசங்களும் இதற்கு விதிவிலக்காகவே அமை யும்! அரபுகள் வாழ்வது அரேபியா என்று நாம் சொல்லிவிட்டால், அங்கு அவர்களுடைய விதி யோடு, அறுத்துக்கொள்ள முடியாதபடி தம்மை பந்தகப்படுத்திக் கொண்டுள்ள யூதர்களும் கிருஸ்து வர்களும் அவ்வாறு பாத்யதை கொண்டாடுகிறார் களே? நிற்க, வேறு என்னவிதமாக வகுக்கலாம்? சந்தர்ப்ப விகாரங்களாலும், வாழையடி வாழையாக வும், தம்முடைய பரஸ்பர நல்வாழ்வையே பரம நலமாகக்கொண்டு, ஒத்த ஜீவன வசதியைபெற்று

லட்சிய வேட்கைகளை பூர்த்திசெய்துகொள்ள சம்மதித்து, அவற்றை நடத்த பூர்ண உரிமை வகித்துவரும் ஒரு சமாஜத்தின் நிலைக்களமே தேசம். இவ்வுரிமை பறிமுதல் செய்யப்படலாம், உதாசினம் செய்யப் படலாம், அல்லது அடைமானம்கூட செய்யப் படலாம்; ஆனால் அந்த தேசவாசிகளின் அழியாத உயிர்நாடி அது. ரோம் சாம்ராஜ்யம் ஒரு குறிப்பிட்ட பூப்பகுதியில் உள்ள சமுதாயத்தை வேருடன் கெல்லிக் களைந்துவிட செய்த முயற்சியே ஐரோப்பிய நாகரிகத்தின் பாரம்பரிய சங்கடமாக யூதப் பிரச்னை என்ற ரூபத்தில், மேல் நாடுகளிலே இருந்துவருகிறது; அங்கு காணும் பல தேசங்களின் நிர்வாகிகளுடைய கோபாவேசத்துக்கும் முதலைக் கண்ணீருக்கும் இலக்காக அமைந்த இந்த யூதப்புதிர், உயிர்வாழ்வுவேட்கை எவ்வளவு விடாப்பிடியாக வேலை செய்கிறது என்பதைக் காட்டுகிறது.

சமுதாயம்: அடுத்த உறுப்பான சமுதாயம் என்றால் என்ன? மனிதன் மந்தை மந்தையாக வாழும் பிராணி. இயற்கையின் சிருஷ்டியிலே புறப் பாதுகாப்புகள் சற்றும் இல்லாத ஜீவன் மனிதன்தான். குளம்போ நகமோ, கோரப்பற்களோ, விஷமோ, வேஷமோ அல்லது ஓடோ, செதிலோ, ஓட்டமோ, வர்ணமோ சற்றும் கிடையாது. ஆனால் அவ்வளவு வசதிகளையும் இயற்கை, உயிர்வாழ்வுக்கு அவசியமான மாகிஷே அரண்களாக மற்றப் பிராணிகளுக்குக் கொடுத்திருக்கிறது. (அல்லது, அம்மாதிரி வேறுபாடுகளை பரிணம நியதிப்படி வாழ்க்கைப்போரில் வகுத்துக் கொள்ள சந்தர்ப்பம் அளித்துள்ளது என்று வேண்டுமானாலும் ஒப்புக்

கொள்ளுவோம்.) ஆனல் மனிதனே அவ்வளவு வசதிகளையும் தனது மனசையையும் புத்தியையும்கொண்டு அமைத்துக் கொண்டால்தான் உயிர்வாழ்வது சாத்தியம்.

மனம் உள்ள பிராணி மனிதன். அதை உபயோகித்து ஆதியிலிருந்தே மனிதன் கும்பலாக வசிக்கப் பழகிக் கொண்டான். இந்தக் குணம் இவனுக்கு எப்பொழுது ஏற்பட்டுப் படிந்தது; மிருகப்பிராயத்திலிருக்கும்போதே இந்தப் பழக்கம் படிந்ததா என்பதெல்லாம், மானுஷ வாலாற்று நுணுக்கங்களில் கண்டு கொள்ளலாம். கூடி வாழ்வது என்பது பூப்பரப்பு முழுவதிலுமே மனிதக் கும்பலின் குணம். கூடி வாழ்வது என்றல், பக்கத்தில் வாழ்பவனும், தன்னைப் போல் வாழ்வதற்கு சம்மதித்தல் என்கிற அர்த்தம். அதாவது பொதுவாக எந்த அளவு வரை இருந்தால் தன் உயிருக்கு ஆபத்து வருவித்து விடாதோ அந்த அளவு வரை பரஸ்பரம் தம்மிடையே அபிலாஷைகளில் உள்ள அற்ப வேறுபாடுகளை விட்டுக் கொடுத்து, அதற்குப் பர்த்தியாக, தன்னுடன் ஒத்துவாழ சம்மதித்தவனுடன், பாதுகாப்பு, பசியாற்றிக் கொள்ளுதல் முதலிய விவகாரங்களில் இணைந்து வேலை செய்ய முற்படுதலேயாகும்.

இந்த ஒரு சம்மதம் குறிப்பிட்ட ஒவ்வொரு மனிதக் கும்பலிடையே குறிப்பிட்ட ஒவ்வொருவித ஒருமைப்பாட்டையும் அனுஷ்டான வள முறைகளையும் வளர்க்கிறது. இவைகளை கலாசாரம் எனவும் பண்பு எனவும் இரு கூறுகப் பிரித்துக் கூறலாம். கலாசாரம், புற அமைதியையும் ஒழுக்கங்களையும் எடுத்துக் காட்டுவதாகவும். பண்பு

என்பது அவற்றிற்கு சூட்சுமமான மன நிலைகளையும், போக்குகளையும் குறிப்பிடுகிறது எனவும் நாம் பிரித்துக் கொள்ளுவதால் சவுகரியம் உண்டு. இப்படிப்பட்ட தன்மைகள் கொண்டதுதான் ஒரு சமாஜம். உதாரணமாக ஹிந்துக்கள் என்று அன்னியர் நமக்கு இட்டுள்ள ஒரு விலாசத்தின் கீழ், மூலாதாரம் ஒன்றாகவும் கிளைகள் பலவாகவும் பெற்ற ஆசார அனுஷ்டானங்களையும் கொண்ட உட்பிரிவுகள் பல இருந்தாலும் இமயம் முதல் குமரி வரை காணப்படும் ஒருமைப்பாடும் ஆசார ஆதாரங் களும் நம்மை ஒரு சமாஜமாக்குகிறது. இதேபோல இங்குள்ள முஸ்லிம்களும் இமயம் முதல் குமரி வரையில் ஒரே தன்மையுடனேயே காணப்படு கிறார்கள். ஹிந்து தர்மம் என்பதின் தொலை தூரக் கிளைகளான பௌத்தம் ஜைனம் ஆகியவையும் அப்படியே. இவ்வாறே நாம் எவ்வளவோ உதா ரணங்களை பெருக்கிக் கொண்டு போகலாம். இவ் வளவு சமாஜங்களும் தம்முடைய அபிலாஷை கள், நலபூர்த்திகள் ஆகியவற்றின் நிலைக்கள மாகக் கொண்டுள்ள பூப்பரப்புதான் இந்தியா தேசம்.

ராஜாங்கம்: மூன்றாவது உறுப்பு ஆதிக்க உரிமை யுள்ள ராஜாங்கம். மேலே நாம் குறிப்பிட்ட பூப்பரப் புக்குள் வாழும் சமாஜம் அழிந்து போகாமல் வாழ ஆசைப்படுவது இயல்பு. மனிதனுடைய உயிர் வாழும் வேட்கையே அது. அதற்கு உரியதான சாதனம் அவன் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டான். குறிப்பிட்ட சமாஜம் அல்லது சமாஜங்களிடையே தனி மனிதர்களின் விவகாரங்களை முறைபடுத்தவும்,

வெளி ஆக்கிரமிப்புகளிலிருந்து அகல அல்லது அவற்றைப் பாதுகாத்து நிற்கவும் அமைக்கப்பட்ட சாதனமே ராஜாங்கம். குறிப்பிட்ட சமாஜம் அல்லது சமாஜங்கள் சம்மதித்துக் கொடுத்த அல்லது சம்மதிக்காமல் இழந்த அதிகாரத்தைப்பெற்று, அது அல்லது அவற்றினிடையே உள்ள ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வையும் சாவையும் நிர்ண யிக்கும் அதிகாரம் படைத்திருக்கும் சாதனம் ராஜாங்கம். பூர்ண ஆதிபத்தியம் என்பது குறிப் பிட்ட பூப்பரப்பின் மீதும் அதில் வாழும் சமாஜத் தினர் மீதும் வடுப்படாத அதிகாரம் பெற்றிருப்பதே யாகும். பிறநாட்டுத் தலையீடோ, அதிகாரமோ அதைப்பாதிக்காது. ஆதிபத்தியத்துக்கு வரம்புகள் உண்டா, அப்படி இருக்குமாகில், அதன் தன்மை களை வயணங்கள் என்ன என்பது பற்றிய சூட்சுமங் களை ஆராயப்புகுந்தால், சோதனை பெரிது பட்டு விடும்.

சர்க்கார்: தற்போது அதை நிறுத்தி வைத்துக் கொண்டு சர்க்கார் என்ற பதத்தை எவ்வாறு, எந்தப் பொருளில் உபயோகித்து வருகிறோம் என் பதையும் பரிசிலனை செய்து கொள்ளுவது அவசியம். "பிரிட்டிஷ் சர்க்கார்," "இந்தியா சர்க்கார்,", "சர்க்கார் உத்தரவு," "சர்க்கார் கட்சி ஜெயித்தது" என்ற பிரயோகங்களில் சர்க்கார் என்ற வார்த்தை ஒரே பொருளில்தான் வருகிறதா? கவனித்துப் பார்ப்போம். ஒரு தேசத்திலே அதன் கட்டுக்கோப்பு குலைந்து விடாமலிருப்பதற்காக ஆட்சி நடத்தும் ஸ்தாபனம் அல்லது யந்திரத்தை தான் நாம் சர்க்கார் என்று குறிப்பிடுகிறோம்.

சர்க்கார் என்பது நாட்டின் மக்களுடன் தொடர்பு கொண்டிருப்பது, பிறநாட்டு ராஜாங்கங்களுடன் உறவு வகிப்பது. வரிவசூல் செய்தல் முதல் விவசாய அபிவிருத்தி, பரிசோதனைக்கூடங்கள் வகுத்து நடத்து வதுவரை, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஆதிபத்திய முள்ள ராஜாங்க அந்தஸ்து வகிக்கும் அரசின் சார் பாக நிர்வாகம் நடத்தும் யந்திரமே சர்க்கார். ஏதாவது ஒரு ஆட்சி இருந்து தான் ஆகவேண்டும். ஆட்சி மனித பலவீனத்தின் புறச்சின்னம். ஆனல் சர்க்கார் இருக்கிறது என்பதால் அந்த நாட்டுக்கு ஆதிபத்திய முள்ள ராஜாங்க அந்தஸ்து இருக்க வேண்டும் என்பதில்லை. சர்க்கார் ஆதிபத்தியத்தின் அறிகுறி அல்ல; அன்னிய நாட்டு நலங்கள் வாய் வைத்து உறிஞ்சும் குழாய்களாக உபயோகித்துக் கொள் ளுவதற்கு வாய்ப்பாக அது அகப்பட்டுக் கிடக்க லாம். அப்படியாயின் அதன் வசம் ஆதிபத்திய உரிமை என்பது எப்படி இருக்கப்போகிறது? ஆதிபத் தியமானது அடைமானம் செய்யப்பட்டோ அல்லது திவாலாகியோ செல்லுக் கணக்கில் ஏறியிருக்கும். இதுவே வேண்டாம். ஸ்தல ஸ்தாபன ஆட்சி என்று ஒரு விலாசத்தை நாம் காண்கிறோம். அதுவும் வரி விதிக்கிறது; குறிப்பிட்ட வரம்புக்குள்ளாக அது வும் குறிப்பிட்ட சில காரியங்களைச் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறது. அந்த ஸ்தலத்தில் ஓரளவு ஆட்சி நடத்துகிறது எனவே சொல்ல வேண்டும். அதுவும் சர்க்கார்தான். ஆனல் அதன் வசம் ஆதிபத்திய உரிமை கிடையாது. அதற்கு மீறிய அதிகாரம் பெற்ற ஸ்தாபனம் அந்த எல்லைமீதே உண்டு. அதாவது, அது ஆட்சி நடத்தும் வட்டாரத்

துக்குள் வேறு ஒரு ஸ்தாபனமும் ஏககாலத்தில் ஆட்சி நடத்துகிறது. அதாவது, அது அமைந்துள்ள நாட்டின் ஆதிபத்திய உரிமையுள்ள அரசின் யந்திரமும் அதே வட்டாரத்துக்குள் அதிகாரம் செலுத்துகிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 FEB 1944
MADRAS

சர்க்காரின் வேலைகள்

சர்க்காரின் வேலை என்ன? இவற்றைப் பொதுப் படையாக மூன்று கூறுகப் பிரிக்கலாம். சட்டம் இயற்றுதல், இயற்றிய சட்டத்தை நடத்திவைத்தல் சட்ட நிர்வாகத்திலே தோன்றக் கூடிய கலக்கங் களைத் தெளிவுபடுத்தல், சர்க்காரும் தெய்வத்தைப் போல முத்தொழில் இயற்றும் ரூப அமைப்புதான். சங்காரம் என்ற மூன்ருவது அமிசம் எதிர்மறையாக கிடக்கிறது என்று சொல்லவேண்டும். நிற்க, சட் டங்களை இயற்றும் ஸ்தாபனத்துக்கு சட்டசபை எனவும் சட்ட நிரூபணமன்றம் என்றும் சொல்லு வார்கள். அசெம்பிளி, கவுன்ஸில் என்பது தெரிந்த பதங்கள். அவற்றை உபயோகிப்பதனுல் பாதகம் இல்லை. சட்டம் இயற்றும் ஸ்தாபனம் ஜனங் களின் கட்டுக்குள் அடங்கியதாக இருந்தால் தான் அசெம்பிளி, கவுன்ஸில் என்ற பெயர்கள் அர்த்த பூர்வமாகப் பொருந்தும். சட்டம் இயற்றும் ஸ்தாப னம் என்றே இப்பொழுது நாம் குறிப்பிட்டு வரு வோம். பின்னர் அதன் சூட்சுமங்களை சந்தர்ப்பம் வரும்போது பார்ப்போம். சட்டம் என்ருல் என்ன? குறிப்பிட்ட தேசமக்களிடையே ஆட்சி நடத்தும் ஸ்தாபனமானது அவர்களது விவகாரங்களிடையே

ஒருமைப்பாடு ஏற்படுத்தும் நோக்கத்துடன், வாழை யடி வாழையாகவரும் வளமுறைகளைத் திரட்டியோ, குறிப்பிட்ட கட்டத்தில் குறிப்பிட்ட காரியத்தை நடத் தவோ தடுக்கவோ, அம்மக்களின் சம்மதத்துடனோ அல்லது, அது அல்லாமலோ தனது அதிகாரத்தைப் பிரயோகித்து அமுலுக்கு கொண்டு வருவதற்காக பிறப்பிக்கும் ஒரு ஏற்பாடு அல்லது ஒரு அனுஷ்டா னம் என சட்டத்தை ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

சட்டம் பிறந்தவுடன் குறிப்பட்ட பலன் கை கூடும் என்று நினைப்பது பிசகு. அதை நடத்திவைக்க ஒரு ஸ்தாபனம் வேண்டும். அதுதான் நிர்வாக இலாகா. இது படிப்படியாக, சிகரத்தில் இலாகா தலைவர் எனவும் பிறகு அவருக்குக் கீழ் பல சிப்பந்தி கள் எனவும் தேசத்தின் சகல பகுதிகளிலும் நின்று, சட்டம் வகுத்துவைக்கும் முறையை நடத்திவைக்க வசதி செய்யும்.

மூன்ருவதாக சட்டத்தெளிவு இலாகா. பொது வாக இதை நீதி இலாகா எனக் கூறுவார்கள். நீதி இலாகா பொதுவாக சட்டத்தின் வரம்பை வகுத்து நிர்த்தாரணம் செய்து, அது பிறப்பிக்கப்படும் பொழுது எதிர்பார்க்கப்படாத சில கட்டங்கள் ஏதாவது ஏற்படும் பட்சத்தில், சட்டத்தை வகுத்த வர்கள், தம் கருத்தில் கொண்டிருந்த நோக்கத் துக்கு அனுசரணையாக சட்டத்தின் வாக்கு அமைதி இருக்கிறதா என்பதை நிர்த்தாரணம் செய்து தெளிவுபடுத்தும் அதிகாரம் வகித்திருக்கிறது. எந்த கட்டுக்கோப்புக்கும் லட்சியம் கிடையாது. கட்டுக் கோப்புக்குள் லட்சிய சாதனை சாத்தியம். ஆகை யினால் தான் சட்டத்தெளிவு இலாகாவை நீதி

இலாகா என்பது உபசார அணி. சட்டத்தெளிவு இலாகாவுக்கு ஒரு குறிப்பிட்ட காரியம் எந்தச் சட்டத்துடன் பொருந்துகிறது, அல்லது பொருந்தத் தவறுகிறது, அல்லது இன்ன சட்டத்துடன் பொருந்துவதினல் மற்ற சட்டங்களுக்கு சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கிறது என்பதை விளக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். சமாஜ லட்சியமான நல்வாழ்வு என்ற பெருநோக்கத்துக்கு உகந்தவையாக சட்டம் அமைந்திருக்கிறதா அல்லவா என்பதை சட்டை செய்யவேண்டிய பொறுப்பு அதற்குக் கிடையாது. ஆனல் கூடியவரை இந்த நல்வாழ்வு லட்சியத்துக்கு உகந்தவையாக தோற்றும் படியாக சட்டங்களை அவை வியாக்கியானம் செய்து கொண்டு போனல், அம் முயற்சி அந்த ஸ்தாபனத்தின் சாதுர்யத்தைக் காட்டுகிறதே ஒழிய லட்சியத்தை காட்டவில்லை. ஒரு கருத்து சட்டத்தின் ரூபத்தில் வராதவரைதான் வளர்ச்சித்தன்மை பெற்றிருக்கிறது. எப்பொழுது அக்கருத்து சட்டமாகி விட்டதோ அப்பொழுதே அந்தக்கருத்து வளர்ச்சிக்கு வேலிபோட்டாகிவிட்டது என்று நாம் கொள்ள வேண்டும். இந்த ரீதியில் கவனித்தால், சட்டங்களை மனித வளர்ச்சியின் வேலிகள் என்றுதான் கருதவேண்டும். சட்டம் குறிப்பிட்ட சமாஜத்தின் ஸ்திரத்தன்மையை காப்பாற்ற முற்பட்ட வரம்புகள். அது இல்லாவிட்டால் சமூகம் இருக்காது. ஆனல் அதன் ஆதிக்கம் நல்லதற்காயினும் கெட்டதற்காயினும், வரம்புமீறி யிருந்தால் வளர்ச்சிக்கு வகையில்லை என்பது நிச்சயம். நிற்க, சட்டத்தை கிரிமினல் சட்டம், ஸிவில் சட்டம் என்று இரண்டு

வகையாக பிரிவுபடுத்துகிருர்கள். முதலாவது பிரிவு, குறிப்பிட்ட அரசின்கீழ் வாழும் யாவருமே செய்யக் கூடாதது என்று ஒதுக்கித் தள்ளிய காரியங்களில் ஈடுபடுகிறவர்களைக் கட்டுப்படுத்தும் அல்லது தண் டிக்கும் நோக்கம் உடையது. அடுத்தது, குறிப் பிட்ட சமாஜத்தினில் நிகழும் காரியங்களில் அதன் கட்டுக்கோப்புக்கு அனுசரணையாக இருப்பதற்காக வகுக்கப்பட்ட முறைகளை நிர்த்தாரணம் செய்து தெளிவுபடுத்தும் சூத்திரங்களாகும். முதல் பிரிவு குறிப்பிட்ட சமாஜமானது தனது நல்வாழ்வு நோக் கத்துக்கு உகந்தவை என எவற்றைக் கருதுகிறதோ அவற்றை தம்மிடையே பெரும்பாலும் இளமையி லேயே போதிப்பதற்கு உபயோகிக்கும் சாதனமான கல்வியின் வரம்பைக் காட்டுவது; அதாவது அது எவ்வளவுதூரம் பலனளிக்கத் தவறியது அல்லது லாயக்கற்றது என்பதைக் காட்டும் அளவுகோல் கிரிமினல் சட்டம். கிரிமினல் சட்டம் ஒரு குறிப் பிட்ட சமாஜத்தில் கல்வியானது இயற்ற தவறிய காரியங்களின் அறிகுறி. ஸிவில் சட்டம் என்பது ஒரு சமுதாயத்தின் ஸ்திரத்தன்மைக்கு அனுசரணை யாக சட்டங்கள் இருந்து வருகின்றனவா அல்லது மாறுபாடாக இருந்து வருகின்றனவா என்பதை பேரளவுக்கு எடுத்துக்காட்டும் தன்மை வாய்ந்தவை. சமாஜ ஸ்திரத்தன்மையின் வரம்பு ஸிவில் சட்டம் என்று சொல்லலாம்.

சமனிடை சேர்க்கை

சர்க்காரின் இந்த முத்தொழில்களும் நேரிய முறையில் நடக்கவேண்டும் என்ருல் இவற்றிடையே தொடர்பும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டும். சொல்லுவதற்கு எளிதானுலும் நேரிய என்ற பதத்துக்கு பொருள் நடைமுறையில் காண்பதுதான் மகா சங்கடமான காரியம்.

வைத்தியத்திலே சுக்கு, மிளகு, திப்பிலி சமனிடை சேர்த்து உபயோகிக்கப் பழகிக்கொண்டால் வைத்திய கிரந்தங்களையே கிழித்துப் போட்டுவிடலாம் என்பார்கள். அதேமாதிரி பிரெஞ்சு சித்தாந்தி* ஒருவர் சர்க்காரின் இம்முத்தொழில்களையும் சமனிடை சேர்த்துப் பிரயோகித்தால் லட்சிய அரசியல் உருவாகி விடும் என்று அதற்கென தத்துவம் ஒன்றைக் கற்பனை பண்ணினர். சமத்தன்மையும் இலாகாத் தனித்துவமுமே பிரதானம் என்பது அவருடைய கருத்தின் சுருக்கம். மூன்றும் சேர்ந்த ஒரே பிண்டமானதாக இருந்தால், ஒவ்வொரு தொழிலும் தன் எல்லைமீறி, மற்றிரண்டின் நிழலிலே நின்று கொடுமைப் படுத்தும் என்பது சொல்லாலே விளங்கும். உதாரணமாக முதல் இரண்டின் சேர்க்கையை மட்டும் வைத்துக் கவனிப்போம். சட்டம் இயற்றும் ஸ்தாபனமும், அதை நிர்வகிக்கும் ஸ்தாபனமும் கூடிக்கொண்டால், நிர்வாக ஸ்தாபனத்தின் பிழைகளை எல்லாம் சரிப்படுத்த சட்டம் இயற்றுவதற்கு

* மான்டெஸ்கு.

சவுகரியம் ஏற்படுமல்லவா. இது தவிர சட்டத் தெளிவு ஸ்தாபனமும் நிர்வாகமும் கூடிக்கொண்டால் நல் நோக்கத்துடன் இயற்றப்படும் சட்டங்களையே ஒன்றுமில்லாம லடித்துவிட முடியுமல்லவா. இது தவிர சட்ட மியற்றும் ஸ்தாபனமும் சட்டத் தெளிவு ஸ்தாபனமும் கூடிக்கொண்டால், நிர்வாகத்தை ஒரு காரியமும் செய்யவிடாமல் கட்டிப் போட்டு விடுவது எளிதல்லவா. முன்னிரண்டுக்கும் இந்திய சர்க்கார் ஆட்சியும் மூன்றுவதற்கு அமெரிக்க சர்க்கார் விவகாரமும் சமீப காலத்தில் தினசரி உதாரணமளித்து வருகின்றன. மான்டெஸ்கு கற்பனை செய்த சமத்தன்மை நிலவவேண்டும் என்ற கருத்தைப் பிரதான நோக்கமாகக்கொண்டு வகுக்கப்பட்டதே அமெரிக்க அரசியலமைப்பு. எடுத்துக் கோத்த கட்டுப்பாடு, ஜாபிதாக் கோவையாக இருப்பதினுல்தான் அமெரிக்க ரகம் வளைந்துகொடுக்க லாயக்கற்றதாக இருக்கிறது. பெரிதும் அதற்கு மாருக, பிரிட்டிஷ் ராஜாங்க அரசியலமைப்போ எனின், கால, சந்தர்ப்ப அவசியங்களுக்கு ஏற்ப உருத் திரிந்து வளர்ந்துவந்த ஒன்றுதலால், சகல சந்தர்ப்பங்களையும் சமாளிக்கும் லாகவம் வாய்ந்தது என்று அரசியல் சித்தாந்திகள் கூறுகிறுர்கள். இது ஓரளவு உண்மையே. அரசியலமைப்பு என்பது எலும்புக்கூடு போல குழைபாவம் காட்டாதது. சகல சந்தர்ப்பங்களையும் தீர்க்க திருஷ்டியுடன் எதிர்பார்த்து, ஒரு ராஜாங்கமானது தனது சரித்திரத்தின் ஒரு கட்டத்திலிருந்துகொண்டு திரிகால நியாயம் வகுக்கப் புகுவது என்பது அபத்தமான தர்க்க நிலையாகும். அதிகார மூலாதாரம் எந்த இடத்தில் அமைந்திருந்தா

லும் அதை துர்விநியோகம் செய்வது பிரமாதமான காரியமல்ல என்பதை சமீபத்திய அரசியல்களின் ஜீவியமே எடுத்துக் காட்டி வருகின்றன. ஆனல் லட்சியமான அரசியல் அமைப்பு அல்லது சர்க்கார் என்பது கூடுமானவரை, முடிவான ஆதிக்க உரிமையை அது ஆளும் வரம்புக்குட்பட்ட மக்களிடமிருந்து பெற்று, எந்த நெருக்கடியையும் சமாளிக்க எந்தவிதமான முறையையும் கையாளும் அதிகாரலாகவும் வாய்ந்திருக்கும் ஒரு ராஜாங்கமே யாகும். இந்தத் தன்மை பேரளவுக்குப் பெற்றிருப்பது பிரிட்டிஷ் அரசியலமைப்பு. இப்படிச் சொல்லுவதனல் பிரிட்டன்தான் அரசியலில் ராமராஜ்யம் என்று கொண்டுவிடக்கூடாது. அப்படிப்பட்ட வசதியுள்ள ராஜாங்கத்தை உபயோகித்து, பொது ஜன அதிருப்தியை எந்த எல்லேவரை உதாசீனம்செய்து, குறிப்பிட்ட வமிசங்கள் தம் இனவளர்ச்சிக்கு வசதிசெய்து கொள்ள முடியும் என்பதை எடுத்துக் காட்டுவது போலவே பிரிட்டிஷ் அரசியலின் நிர்வாகமுறை இதுவரை இருந்து வருகிறது. அரசியல் கட்டுக்கோப்பு நுட்பதிட்பங்களே பீஜ கணிதம்போல பரிசோதித்தால் தான் அவற்றின் தராதரம் தெரியவரும். சரித்திர உதாரணங்களில் உலாவ ஆரம்பித்தால் அது ஒரு பெரும் கானகம். குறிப்பிட்ட ஒரு கோலத்துக்குள் அமைத்துப் பார்க்க உதாரணங்களேத் தெரிந்தெடுப்பது என்பதே, அவற்றை, அவற்றின் சூழ்நிலேகளிலிருந்து பெயர்த்து, குறிப்பிட்ட லட்சணங்களுடன் பொருத்திக் காட்டும் முயற்சியாகவே முடியும் விஷயமாகையால், கூடியவரை உதாரணங்களேவிட்டு விலகியே செல்லுவோம்.

ராஜாங்க லட்சணம்

பிரிட்டிஷ் அரசியல் சித்தாந்தி ஒருவர், பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் ஆதிபத்திய உரிமையைவகிக்கும் ஸ்தாபனத்தின், [பார்லிமெண்டின்] ஆதிக்கவரம்பைப் பற்றி விவரித்து வருகையில், "ஆணைப் பெண்ணாக்கி பெண்ணை ஆணாக்குவது தவிர மற்ற எல்லாக்காரியங் களையும் சாதிக்க வல்லது" என்று கூறி இருக்கிறார். அதாவது பரிபூர்ண ஆதிக்க உரிமை அங்கு ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்த ஆதிக்க உரிமையானது எந்த ஸ்தானத்தில் இருக்கிறதோ அதற்கேற்பவே ராஜாங்கத்தின் தன்மை அமைந்திருக்கும். உதாரண மாக இந்த உரிமை ஒருவனிடம் வாழையடி வாழையாக வருமேயாகில் அந்த ஆட்சிக்கு மன்ன ராட்சி என்று குறிப்பிடுகிறோம், இவ்வாறல்லாமல், அதாவது பாரம்பரியவளமுறையாக அல்லாது ஒற்றை மனிதனிடம் சிக்கியிருக்குமாகில் தனியரசு என்கி றோம். இதல்லாமல் ஒரு சில குடும்பத்தின் பாரம்பரிய "சொத்தாக" இருக்குமாகில் பிரபுக்கள் ஆட்சி என்று குறிப்பிடப்படுகிறது. இது அவ்வாறு பாரம்பரிய விவகாரமாக அல்லாமல் சந்தர்ப்ப சேர்க்கைகளாக இருந்தால் சிறுகும்பலாட்சி என்று குறிப்பிடலாம். தவிர ஆதிக்க உரிமையானது குறிப்பிட்ட சமுதாயத் தின் அங்கத்தினர்கள், அதாவது பிரஜைகள் என்ற

மக்கள் கூட்டத்திடம் நிலவுமாகில் மக்களாட்சி எனவோ ஜனநாயகம் எனவோ குறிப்பிடலாம். மக்கள் என்ற பதம் இன்னாரைக் குறிப்பிடு கிறது என்ற நிர்ணயம் நிலைகுலைந்த கட்டத் திலே ஜனக் கூட்டம் முழுமையுமே. தம்மிடம் சர்க் காரின் முத்தொழிலும் இருப்பதாகக் கருதி, நேரடி யாக ஏகோபித்து காரியம் நடத்துவதற்கு பெருங் கும் பலாட்சி என்று பெயர் கொடுக்கலாம். நாடு நிலைதவறி, ஸ்திரத்தன்மைக்கு அவசியமான பாது காப்பு மதில்கள் இற்று விழுந்த நிலையில்தான் இந்த பெருங் கும்பலாட்சி ஏற்படும். இந்தப் பெருங் கும் பலாட்சிதான் குறிப்பிட்ட ராஜாங்கத்திடம் அதன் எல்லைக்குட்பட்டு வாழ்ந்த சமுதாயம் காட்டும் சகிப்பு வரம்பு. பால்பொங்குவதுபோல கொந்தளித்து ஒடுங்கிவிடும், இந்தமாதிரியான கோளாறுகள் இயற்கையாக எழும் கொதிப்பாலோ அல்லது சில ருடைய முயற்சியின் விளைவாகவோ அடிக்கடி தோன்றாமலும், தோற்றுவிக்க இடம் கொடாமலும் அமைந்திருக்கும் ராஜாங்கந்தான் நல்லரசு என சொல்லமுடியும். ஆதிக்க வரம்புதான் மக்கள் கூட் டத்தின் பாதுகாப்பு மதில். எனினும் அது எந்தவித மான பீடத்தில் அமைந்திருந்தாலும் துர்வினியோக வசதிகள் இருக்கத்தான் செய்கின்றன. இவ்வசதி கள் பயன்படுத்திக் கொள்ளப் படும் நிலையில்தான் ஆட்சி திரிந்து வக்கரிக்கிறது. அதற்குத்தான் கொடுங் கோன்மை என்று பெயர். கொடுங்கோன்மை என் பது நல்லது கெட்டது என்ற வர்ஜா வர்ஜமின்றி, கெட்டதைப் போல நல்லதையும் பலவந்தப்படுத்தும் ஒரு விவகாரமேயாகும். ஒற்றை மனிதனோ ஒரு

சிறுகும்பலோ, அல்லது ஒரு மக்கள் கூட்டமோ இம்மாதிரியான விவகாரங்களில் ஈடுபட்டு பிரவே சிக்காத முறையில் தடை செய்ய அரசியல் கட்டுக் கோப்பில் வேலிபோடுவது என்பது முடியாத காரியம் என்பதையே சரித்திரம் இன்றுவரை நிரூபித்து வரு கிறது. இன்று நாம் பிரிட்டனில் மன்னராட்சியும் தனிமனித ஆட்சியும், மக்களாட்சியும் கலந்த ஒரு கதம்பத்தைப் பார்க்கிறோம்; அதற்குத்தான் பிரிட்டிஷ் ராஜாங்கம் என்று பெயர். தனியரசும் மக்களாட்சி யும் கலந்தது எனவே இன்றைய நிலையில் அமெரிக்க ராஜாங்கத்தைச் சொல்லலாம். தன்னந்தனியரசாக எந்த இடத்திலும் கிடையாது. தன்னந்தனியான சிறு கும்பலாட்சியாகவோ, அல்லது மக்களாட்சி யாகவோ எந்த இடத்திலும் கிடையாது. பிரஜா உரிமை நிர்ணயத்தில் அளவுகோல்களை அடியோடு மாற்றியமைத்து, குறிப்பிட்ட வரம்புக் குட்பட்ட, மக்கள் கூட்டத்தின் சம்மதம் பெற்ற வடுப்படாத பூர்ண ஆதிக்க உரிமைகொண்ட ஒரு ராஜாங்கத் துடன் தனியரசுக் கலையையும் பெற்று சோபிப்பது தான் ஸோவியத் ரஷ்யா. மன்னராட்சியும், ஒரு சிலர் ஆளுகையும், மக்களின் பலவந்த சம்மதமும் பெற்று நிலவுவது ஜப்பானிய சர்க்கார். இன்று சீனவில் தென்படுவது மக்களாட்சியை கொள்கையில் மதிக் கும் ராணுவசர்க்கார் என்று சொல்லவேண்டும். இப்பொழுது தென்படுவதுயாவுமே கதம்ப ரூபங்கள் தான். இந்தக் கதம்ப ரூபத்தில் எது பிரதான அம்சம் என்பது புலப்படுமாகில் அதுவே அவ்வரசின் தன் மையை நிர்ணயிக்கும் விலாசம் என்று கொள்ள வேண்டும்.

ஆட்சிமுறையின் கட்டுக்கோப்புபற்றி ஆராய்ந்து வருகையில் ஆதிக்க உரிமையின் ஆதார பீடம் மக்கள் அல்லது பிரஜைகளாகவும் இருக்கலாம் என்றோம். மக்கள் என்ற பதத்துக்கு அரசியல் பரிபாஷையில் உரிமை உள்ளவர்கள் என்பதுதான் பொருள். நாட்டிலுள்ள அரசியல் கட்டுக்கோப்பைப்பற்றி கவனிக்க அல்லது உதாசீனம் செய்ய உரிமை பெற்றுள்ளவர்களே மக்கள். உயிர் வாழ்வுக்கு அனுசரணையாகவுள்ள வசதிக்காகவும் குறிப்பிட்ட ஆளுகையின் கீழ் வாழ்ந்து வருவதால் குறிப்பிட்ட நலத்தை அனுபவித்து வருகிறவர்கள், அல்லது அனுபவிக்க தகுதியுடையவர்கள் என்று மதிக்கப் பெறுகிறவர்கள் இவர்கள். இந்த உரிமையை நிர்த்தாரணம் செய்ய ஒவ்வொரு நாடும் தனது மனப்போக்குக்கும், தன் ஆசைப்போக்குக்கும் ஏற்றவாறு வரம்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. சொத்து, படிப்பு, தொழில் முதலிய சில அளவுகோல்களை வைத்து அவ்வுரிமை மதிக்கப்படுகிறது. அவ்வுரிமைதான் வோட்டு. வோட்டுள்ளவன்தான் பிரஜை. அதாவது குறிப்பிட்ட சமுதாயத்தின் போக்கு இன்னமாதிரி அமைந்திருப்பது அவசியம் என்பதை நிர்ணயிப்போருடன் சம்மதித்து ஒத்துப்போக இன்னின்னார்கள்தான் தேவை என்று வரம்புபடுத்தப்பட்டு, அவ்வரம்புக்குள் அமையும் சமாஜ அங்கத்தினன் ஒவ்வொருவனும் பிரஜை என்ற அந்தஸ்து பெறுகிறான். வோட்டுரிமை ஒவ்வொருவனுக்கும் தனது நாட்டின் நிர்வாகத்தை நடத்துவதில் தனக்கிருக்கும் பாத்தியதையைக் குறிப்பிடும் அம்சம். கீரல் ராமசாமி, சொத்தை அனுபவிக்கவும், அதைப் பந்தகப்படுத்தவும் உரிமை பெற்

றிருப்பதுபோல, வோட்டுள்ள ராமசாமி, தனக்கு ஆளத்திறமை இல்லாவிட்டாலும், இன்னொருவர் அவ்வாறு செய்வதற்குச் சம்மதிக்க அதிகாரம் பெற்றிருக்கிறான்.

குறிப்பிட்ட சிறு வரம்புக்குட்பட்டு, குறிப்பிட்ட சில காரியங்களை மட்டும், அதாவது வோட்டுள்ள ராமசாமி புரிந்துகொள்ளக்கூடிய விஷயங்களை மட்டும் செய்யும் தொழில்தான் அரசாட்சி என அமைந்திருந்தால், ராமசாமியே நேராகப்போய் தன்னுடன் அவ்வாறு சமமாக வோட்டுப் பெற்ற பலருடன்சேர்ந்து பரிசோதித்து நிர்வாகத்தை நடத்த முடியும். ஆனால் ராஜ்ய விஸ்தீர்ணம் பெரிதுபடுவதுடன், ராஜ்ய சிரத்தைக்குறிய காரியங்கள் சிக்கல்பட்டதாகவும் சூட்சுமமானதாகவும் ஆகிவிட்டதால் "இந்தச் சள்ளை நமக்கெதற்கு" என்று போடுகிற வோட்டோடு பொறுப்புக்கும் அவன் ஒரு முழுக்குப் போட்டு விடுகிறான். பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவன் செய்யும் காரியங்கள் சகிக்க முடியாதபடி அதாவது காலைக் கடிப்பதாக இருந்தால் அடுத்த முறைவரும்போது சற்று உஷாராக இருக்க முற்பட்டு "மற்றொரு காலில் கடிபடுவதற்கும்" சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு உரிமை பெற்றிருக்கிறான். இதற்குத்தான் பிரஜையின் மறைமுக நிர்வாகம் அல்லது மக்களின் சம்மதம் பெற்ற ஆட்சி என்று பெயர். இந்த சம்மதம், சகிப்புத்தன்மையாக அல்லாது சுமக்கும் தன்மையாக மாறும்போதுதான் ஆளுகையில் வக்கரிப்பு ஏற்படுகிறது. மக்களாட்சியில் ஜனங்கள் வோட்டுப் போடுகிறார்கள். ஏதேச்சாதிகாரத்தில் ஜனங்கள் வோட்டை "கக்குகிறார்

கள்." பூர்ண ஆதிபத்தியமுள்ள சமூகம் ஒன்று அசாதாரணமான சந்தர்ப்பங்களில், அதாவது யுத்தம், உள்நாட்டுச் சீர்குலைவு, பொருளாதார நெருக்கடி போன்றவற்றில் தற்காலிகமாக ஒவ்வொரு பிரஜையிடமிருந்தும் பிடுங்கிவிடும் உரிமையை அவன் சமாதான காலத்திலும் அம்மாதிரியே ஸ்திரமாக இழக்க வைக்கும் ஒரு ஆளுகை யந்திரத்தைத்தான் எதேச்சாதிகார அரசு என்று குறிப்பிடுகிறோம். மேலும் மக்களாட்சி என்பதுதான் என்ன? பூர்ண ஆதிபத்தியமுள்ள மக்கள் கொண்ட ஒரு சமுதாயத்தில் வாழும் பிரஜைகள், தம்முடைய சம்மதத்தின் பேரில், தம்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப்பட்ட சிலர் அனுஷ்டிக்கும் முறைகளையும் நடத்தும் காரியங்களையும் எந்த அளவுவரை தாம் சம்மதிக்கத் தயார் என்பதை புலப்படுத்துவதற்கு வசதி தரும் கட்டுக்கோப்பு உள்ள சர்க்காருக்குத்தான் மக்கள் ஆட்சி என்று சொல்லுவது பொருந்தும். மக்கள் வகிக்கும் சம்மத வரம்பைக் காட்டும் சர்க்கார் எனவும் இதை சுருக்கமாகக் கூறலாம். சம்மத வரம்பு என்பது சகிப்புத்தன்மை. உத்தேசித்த பலன் காரியாம்சத்தில் கை கூடுமோ என்னவோ என்பதை நிச்சயமாக தொடக்கத்தில் நிர்ணயிக்க முடியாது போகும்போதுகூட, ஒரு குறிப்பிட்ட முறையை அனுஷ்டிப்பதற்கு தமக்கு இருப்பதாகப் பாவிக்கும் ஒரு உரிமையை இவர்கள், தம்மைப்போல் சம அந்தஸ்தும் வசதியும் உள்ள இதரர்களுக்கும் வழங்குவதற்கு சம்மதிக்கும் ஒரு மன நிலைதான் சகிப்புத்தன்மை. சுருங்கக் கூறினல் ஆழம் தெரியாமல் காலைவிட்டுக் கொள்ளுவது

என்பது தமக்கு மட்டுமே பிரத்தியேக உரிமையல்ல என்பதை மனமுவந்து பகிர்ந்துகொள்ள முற்படும் சமநிலைதான் சகிப்புத்தன்மை. மேலே விவரித்ததை அலங்காரமான முறையில் கூறுவது என்ருல் அதை சமரசமனப்பான்மை என்று சொல்லுவார்கள். கூட்டமாக கூடிவாழுவதற்கு முற்பட்டுவிட்டால், பேரளவு நபர்களின் சம்மதம் என்பது அவசியம். இந்த அளவு பெருகப்பெருக லட்சிய வரம்பு தாழ்ந்தேவருவதற்கு வசதி உண்டு ; ஆனுல் குறுகிக்கொண்டு போவதனுல், லட்சிய நோக்கம் உயர்வடைய வேண்டும் என்பதும் அவசியமில்லை.

ஆதார பீடம்

குறிப்பிட்ட வட்டாரத்தில் நிலவும் சமாஜ வாழ்வுக்கு ஸ்திரத்தன்மை தரும் சாதனத்தை, சுமக்க சம்மதிப்பவர்கள், அந்த வட்டாரத்தின் வளர்ச்சி வீழ்ச்சிகளுடன் தம் வாழ்வும் பின்னிக் கிடக்கிறது என்பதை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்பது வெளிப்படை. சொத்து, உறவு, பழக்கவழக்க ஒருமைப்பாடு, ரத்தபந்தம், பாசம் முதலியவை குறிப்பிட்ட நபரை குறிப்பிட்ட வட்டாரத்துக்குள் வேரூன்ற வைக்கிறது. அன்ன விசாரத்தினடியாகப் பிறந்த சொத்து விசாரந்தான், குறிப்பிட்ட நபரை, நேரடியாக, வாழும் மண்ணோடு கட்டிப்போடுகிறது; அதனால் முக்கியமாக அதையும், பிறகு அதற்கு அனுசரணையாகவுள்ள கல்வி, தொழில் முதலியவற்றையும் உரிமையின் அளவு கோல்களாக நிர்ணயிருத்திருக்கிறார்கள். இப்படி சம்மத வரம்பு நிர்ணயிக்கப் படுவது, சமுதாயக் கட்டுக்கோப்பின் தன்மையையும் அதைப் பாதுகாப்பதே தனது நோக்கம் என்று கொண்ட அரசின் ரீதியையும் பேரளவுக்கு நிர்ணயிக்கிறது. பிரஜைகளின் நலங்களே அரசின் பிரதான லட்சியம் என்று கூறப்படுவதால் ஒரு சமுதாயத்தில் வாழுகிறவர்களில் இன்னின்னார் நலங்களுக்கே சாக்கார் ஏற்படுகிறது என்பதை இது குறிப்பாக வரம்பு

படுத்துகிறது. கூன், குருடு, சப்பாணி முதலிய உடல் ஊனங்களும், மூடம், மந்தம், பித்துக்குளி, போன்ற மன ஊனங்களும், பிச்சைக்காரன், சோமாரி போன்ற சொத்து ஊனங்களும் பட்ட ஜனக்கும்பல் சமுதாயத்தின் அங்கத்தினர்கள் தாமா அல்லவா? இது தவிர சமூகத்துக்காக அல்லும் பகலும் அதன் நலத்தையே, சந்தர்ப்ப நிலைமையாலோ, மற்றும் சுதரவாக சிந்தனை செய்ய திராணி இல்லாததினாலோ, கரிசனையுடன் பாதுகாக்க வேறுவிதியின்றி உழைத்து வரும் கும்பலும் ஒன்று உண்டு. இதுவும் வோட்டுப் பெற்றும், தேச நிர்வாகம் இன்னமாதிரியில்தான் இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் உரிமை பெற்றும் அதை உபயோகிக்கும் விதம் தெரியாமல் இருந்தும் வருகிறது. இவர்களது நலத்தையும், அதாவது இவர்கள் இவ்வாறே இருந்து வருவதற்கு அவசியமான காரியங்களையும் செய்து வருவது வோட்டுள்ளவர்களை நடத்தும் கூட்டம் இப்போது கவனித்துவரும் காரியம். சர்வஜன வோட்டுரிமை, அதாவது ஒரு சமாஜத்தில் இருந்து வரும் சகல மனித ராசிகளுக்கும், மனிதனாகப் பிறந்த காரணத்திற்காக அந்த சமாஜ நலத்தில் சிரத்தை கொள்ள உரிமை கொடுப்பது நியாயமானதுதான். ஆனால் பொதுவாக மனித சரித்திரத்தை, அதாவது வோட்டுப் பிரக்ஞையுடன் வாழும் சமுதாய சரித்திரங்களை, பார்க்கப் புகுந்தால், நிர்வாகம் நடத்தும் அரசின் பொறுப்புகள் பெருகப் பெருக வோட்டுரிமையும் பெருகுகிறது என்பதைப் பார்க்கிறோம். சமாஜத்தின் எந்த உருப்புகள் திருப்தி செய்விக்கப்படாவிட்டால், அதன் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து

என்ற நிலை ஏற்படுகிறதோ அப்போது அவற்றிற்கெல்லாம் அப்படிப்பட்ட பிரக்ஞை ஏற்படும் போதிலிருந்து, வோட்டுரிமை, அதாவது நிர்வாகப் போக்கை நிர்ணயிக்கும் உரிமை, கொடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் வோட்டுப் பெற்றிருப்பவர்களுக்கும் அதன் மீது நிர்வாகம் நடத்துவோருக்குமிடையேவுள்ள விகிதாசாரத்துடன், வோட்டுப் பெற்றிருப்போருக்கும், வோட்டற்ற ஜனக்கும்பலுக்குள் விகிதாசாரம், நிர்வாகத்துக்கு உள்ள திருப்தி செய்விக்கும் தன்மையைக் காட்டுகிறதா அல்லது, பிரதிநிதித்துவத்தைக் காட்டுகிறதா என்பது சர்ச்சைக்கு உரியவிஷயம்; குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் தேவைகள் பெருகப் பெருக, நிர்வாகத்தின் பொறுப்புகள் அதிகமாகித்தான் தீரும். அவற்றைச் சமாளிக்க அப்போதைக்கப்போது பிறக்கும் சட்டங்கள், மேலுக்குமேல் படிந்து உறையும் பாசியின் தன்மையைப் பெறுவது சகஜம். குறிக்கோள் என்பது கோணம் திரியும்; அதாவது பிரக்ஞையில்லாமலே திரியும்; ஆனல் ஸ்திரத்தன்மையை முன்னிட்டு ஆதியில் கோலிய அஸ்திவாரங்கள் விலகி, புதிய கோணத்துக்கு ஏற்ப அவை வாய்ப்பாக நின்றுகொள்ளுகின்றனவா எனில், லட்சியப் பார்வை மாறுபட்டதும் உடனே அதனேடு சேர்ந்தாற் போல அஸ்திவார மாறுதலும் ஏக காலத்திலும் ஏற்படுவதில்லை, ஏற்படுவதும் கஷ்டம். இதுவே சமாஜத்தில் எப்பொழுதும் ஒரு கரகரப்பை தந்து கொண்டிருக்கும். இது சகிப்பு வரம்பை மீறும்போதுதான், ஸ்திரத் தன்மைக்கு ஆபத்து ஏற்படுகிறது.

வோட்டு என்பது திருநீறுபோல ஒரு சின்னம்.

ஏனென்ருல், குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில், இன்னின்னர்தான் அதன் நலத்தைக் கவனித்து நடத்தும் ஸ்தாபனத்தின் தன்மையை நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்கள் என்பதை காட்டுகிறது. குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் வோட்டுள்ளவர்களின் வேட்கைகளும் நலங்களும் ஒரே திசையில் அமைந்திருக்க வேண்டும் என்பது இல்லை. உதாரணமாக ஒரு சமாஜத்தின் பிரதான தேட்டம் விவசாயத்தோடு பின்னிக்கிடக்கிறது என்ருல், நிலம் விளைத்த பொருள்களைக்கொண்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் தேசம் ஈடுபடுவதை ஆதரிக்கும். குறிப்பிட்ட அதே சமாஜத்தில் யந்திர உபயோகத்தால், பெரு உற்பத்தியில் ஈடுபடுவதற்கு வசதி இருக்குமாகில், விவசாய நலங்களும் உற்பத்தி மோகத்திலீடுபட்டவர்களும் எதிரெதிரான ஆசைகளை வகிக்க இடமுண்டு. உள்நாட்டு யந்திரங்களின் தேவைக்குப்போக மீதமாகவுள்ள சரக்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும்போது, அவற்றை வாங்கிய நாடுகள், தம் தேசத்தில் கொண்டுபோய் உற்பத்திச் சரக்குகளாக மாற்றி, விற்ற நாட்டின் அங்காடியிலேயே வந்து போட்டி போடமுடியும். இந்த மாதிரியான நிலை சம்பவிக்கும்போது, நாட்டின் பொருள் உற்பத்தி நலங்களுக்கும் சாகுபடி நலங்களுக்குமிடையே முரண்பாடு ஏற்படுகிறது. இவ்விரண்டு நலங்களும் ஓட்டுப் பெற்ற பிரஜைகளைக் கொண்டிருத்தலால், இருவர்க்கமும் தத்தம் நலபூர்த்திக்கான வகையில் சட்டம் வகுத்துக்கொள்ள ஆசைப்படுகிறது. யந்திர முதலாளித்துவ ஆதிக்கமே சட்டமியற்றும் ஸ்தாபனத்தில் பேரளவு இடம் பிடித்துக்கொள்ள சவுகரியம்

இருக்குமாகில், விவசாய நலங்களின் கை தாழ்ந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

இதற்காக சட்டம் இயற்றும் ஸ்தாபனமானது, மக்களாட்சி கொண்ட ஒரு சமாஜத்தில் இரண்டு அரங்குகளைக் கொண்டிருக்கவேண்டும் என சிபார்சு செய்யப்படுகிறது. ஒவ்வொரு அரங்கும், அதில் பிரதிநிதியாக வர பாத்யதை உடையவனுடைய சொத்தின் தாராதரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது இவ்விரண்டு அரங்கங்களும், தத்தம் தனித்தனி விவாதத்தின் முடிவில் சட்டமாக்கும் ஒரு ஏற்பாடு, சமாஜத்தின் சம்மதத்தின் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு காரியமானது, ஒரு அரங்கில் நிராகரிக்கப்பட்டு, மற்றொரு அரங்கு அப்படி நடத்தியே தீர்வது என்று முரண்டும் பட்சத்தில் எழும் நெருக்கடியை நிவர்த்தி செய்ய, அப்பிரச்னையையே, அதாவது சர்ச்சைக்கு ஆதாரமாக முளைத்த காரியத்தையே, தம் பிரதிநிதித்துவத்தின் தன்மையை சோதிக்கும் ஒரு விஷயமாகக் கொண்டு, வோட்டுள்ளவர்களின் சம்மதத்தைப் பெறவோ, அல்லது பெறத் தவறவோ ஏற்பாடு செய்யவேண்டியது மக்களாட்சியின் பாற்பட்ட சமாஜத்தின் வேலையாகும்.

நிற்க, குறிப்பிட்ட ஒரு கருத்து, அல்லது ஒரு நலம், அல்லது ஒரு ஏற்பாடு சர்வ சம்மதம் பெற்றிருப்பது என்பது, ஏற்றத்தாழ்வை இயல்பாகக் கொண்ட சொத்துரிமை சமாஜத்தில் சாத்தியமற்ற காரியம். இதிலே குறிப்பிட்ட ஒரு ஏற்பாட்டை விரும்பும், அல்லது விரும்பத்தவறும் மனிதர் இருக்

கத்தான் செய்வார்கள். இவர்களது எண்ணிக்கைக் குறைவு இவர்களது ஆசைக்கு தடையாக இருக்கக் கூடும். இப்படிப்பட்டவர்களின் ஆசைகளை மதிப் பது அவசியமா என்பது சற்று கவனித்துப் பார்ப் போம். குறிப்பிட்ட கருத்துக்கு ஆதரவு கொடுத்து, எண்ணிக்கைக் குறைவினல் அதை நடத்திக்கொள்ள சாத்திய மற்றிருப்பவர்களும் மனிதர்கள்தான். அதாவது, குறிப்பிட்ட சமூஜத்தின் ஸ்திரத் தன்மைக்கு அவசியமான இதரக் கட்டுப்பாடுகளை ஏற்க சம்மதிப்பவர்கள்தான்; ஆகையினல், அவர் களது ஆசைகளை உதாசீனம் செய்யாது, சமாஜத் தின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து விளையாதவகையில், அவர்கள் தமது ஆசைகளின்படி நடந்துகொள்ள சம்மதிப்பதே விவேகம் உள்ள மக்களாட்சியின் தன்மையாக இருக்கவேண்டும். சமாஜ நலத்தை பெருக்கிக்கொண்டு போவதுதான் லட்சியம் என்று அமையுமாகில் விவேகத்தைவிட ராணுவம் உபயோக மாகும் என்று சில அரசியல் சித்தாந்திகள் கருது கிருர்கள். இவர்கள் நாட்டின் நிர்வாகததை கைப் பற்றிக் கொள்ளும்போது, தனி மனித உரிமைகளை மதிப்பதுகூட அனுவசியம் என்று கருதுகிருர்கள். வோட்டுள்ள சமுதாயம் இவர்கள் கைவசம் சிக்கும் போது, கட்டு ஜனநாயக ரீதியில் அமைந்திருக்கு மாகில், அவர்களுக்கு அதனல் பெருத்த இடையூறு எதுவும் ஏற்படுகிறதில்லை. இந்தமாதிரி கும்பல்கள் நாட்டின் வர்ம நாடியான அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கு, ஓரளவு ராணுவமும், பேரளவு அந் நாட்டு முதலாளி வர்க்கமுமே துணைபுரிகின்றனர். இவர்களது உதவியினல் நிலவும் ஆட்சிதான் பாஸி

ஸம் என்று கூறப்படுகிறது. மக்கள் ஆட்சியில் நிர்வாக யந்திரமானது, உறுதி சற்றும் இல்லாத பதவி வேட்டை உடும்புகளிடம் அகப்பட்டு, சமாஜத் தொடர்பை இழந்து நிர்வாகத்தை, நல பங்கீடு அங் காடியாக ஆக்கிவிடும்பொழுது, இந்த பாஸிஸம் என்ற முதலாளித்துவ சமாஜத்தின் வக்கரித்த ஆட்சி உதயமாகிறது. தொற்றுநோய்கள் போல, இந்த ஆட்சியும் ஒரு தற்காலிகமான சாகைதான். சித்த வைத்தியத்தின் பாஷாண சிகிச்சை மாதிரி இற்றுப் போன சமாஜத்தை உயிர்ப்பிக்க, இந்த சர்வ-தாண்ட வம் அவசியம் என வாதிக்கிறவர்கள் உண்டு. இந்த மாதிரியான சித்தாந்தம் எல்லாம், தர்க்க சோதனை களாக வைத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, மனித வம்சத்தின் அந்தராத்மாவான சமாஜ ரூபத்தின்மீது பிரயோகித்துப் பார்க்கவேண்டிய விஷப் பரிட்சை கள் என்று கருதக்கூடாது. அரசியல் கட்டுக் கோப்புக்கு குணம் கிடையாது. ஆனல், இணைப்பு-பிணைப்புகளில் எளிமைவேண்டும். கூடுமானவரை எந்த சந்தர்ப்பத்திலும், எந்த அவசரத்துக்கும் ஏற்ப மாறிக்கொள்ளக் கூடிய லாகவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும்.

ராஜாங்கமும் தனி மனிதனும்

ஒரு சமுதாயம் உள்பகையினுல் அதாவது தன்னிடையே உள்ள மனிதராசிகளிடையே ஒருமைப்பாடு இல்லாததினுல் நசித்துப்போகாமல் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கு முறையை வகுத்து அதை நடத்துவதற்கு சட்டத்தையும், வெளியிலிருந்து நிகழக்கூடிய ஆபத்துகளைத் தடுத்துக்கொள்ள ராணுவத்தையும் துணையாகக் கொண்ட ஒரு ஸ்தாபனம் ராஜாங்கம். இந்த ராஜாங்கத்தின் உருவத்தை, கட்டுக்கோப்பை சர்க்கார் என்கிறோம். இது தனி மனிதனுடைய வாழ்வில் எந்த அளவுவரை தலையிடுவது நல்லது, எந்த அளவுவரை தலையிடலாம் என்பது நாம் இனிமேல் ஆராயவேண்டிய பிரச்னை.

மனிதன் கூட்டம் கூட்டமாக கூடிவாழும் பிராணி. பாதுகாப்பு என்பது கூட்டத்தில் தான் இருக்கிறது. இந்த நிலையில், பரஸ்பரம் ஒவ்வொருவரும் தமக்கு இஷ்டமானபடி எல்லாம் நடந்துகொள்ளுவதற்கு வகித்துவரும் உரிமையில் ஒரு சில பகுதியை விட்டுக் கொடுத்தால் தான் பாதுகாப்பு சாத்தியம். இவ்வாறு மனிதர்கள் விட்டுக்கொடுக்கும் உரிமையை அவர்கள் இழந்துவிடவில்லை. அதை எதிர்மறையாக உபயோகிக்கிறார்கள். பாதுகாப்பை முன்னிட்டு அவ்வுரிமையை உபயோகிக்காதிருக்க சம்மதிக்கிறார்கள்.

இதற்குப் பதிலாக ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கு அவசியமான பாதுகாப்பை சமுதாயத்திடமிருந்து எதிர்பார்க்கிறான். பாதுகாப்பு என்பது இரண்டுவிதப்பட்டது. ஒன்று, சமுதாயத்துக்குள்ளாகவே யாதொரு விதமான ஒருமைப்பாடோ ஒழுங்கோ இல்லாது போவதினால் அது நசித்துப் போவதற்கு ஏதுவான காரணங்களைத் தவிர்த்தல்; இரண்டாவது வெளியிலிருந்து வரக்கூடிய ஆபத்தைத் தடை செய்தல். இவ்விரண்டு காரியங்களையும் சர்க்கார் கவனித்து வருகிறது. பிரதானமாக உள் பாதுகாப்பைக் கவனிப்பதற்கு நிர்வாக இலாக்கா என்று குறிப்பிடலாம்; வெளிப் பாதுகாப்பைக் கவனிப்பது ராணுவம், என பொதுப்படையாக சொல்ல வேண்டும். தவிரவும் உள் பாதுகாப்புக்கு பின் பலமாக நின்று அதை ஸ்திரப்படுத்துவதற்கும் ராணுவம், அடிக்கடி தலையிடா விட்டாலும், அவசியமாகத்தான் இருக்கிறது. ஒரு சமூகம் நிலைத்து நிற்பதற்கு பலம் அவசியமாக இருப்பதுபோலவே ஒரு ஆட்சி நிலைத்து நிற்பதற்கு அதிகாரம் இருக்கவேண்டும். அதைத் தந்து உதவுவதுதான் ராணுவம். எவ்வளவுதான் ஜனங்களின் பூர்ண பிரக்ஞையில் எழுந்த சர்க்காராக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட விவகாரத்தில் இன்னமாதிரிதான் நடந்துகொள்ள வேண்டும் என்று நிர்த்தாரணம் செய்து அதை நடத்துவதற்கு பலம் அவசியம். தனிமனிதனுடைய நோக்க வரம்புகள் விசாலமானவையல்ல. அவன் இதை புரிந்து கொள்ளும்படி செய்விப்பது அவசியம். ஏனென்றால் குறிப்பிட்ட சர்க்காரின் நிழலில் தங்கி வாழுபவர்களுக்கு கடமைகளை இளவயசிலிருந்தே பூர்ணமாகப் போதிப்பதோ அதை

அவர்கள் பூர்ண பிரக்ஞையுடன் ஏற்று ஒழுகுவதோ பேரளவில் காரியசாத்தியமல்ல. தனிமனிதனுக்கு சொத்து உண்டு; அதை அவன் வளர்க்க, அதாவது தனது ரத்தபந்த உறவின் முறையினர் ஸ்திரத்தன்மைக்கு அவசியமான துணைக்கரணங்களைத் தேடிக் கொள்ள, அவனுக்கு பூர்ண உரிமை உண்டு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சமுதாயத்தில் அந்த உரிமை, பொதுநலத்துக்கு ஆபத்து விளைவிக்காதபடி பார்த்துக்கொள்ளுவது சர்க்காரின் வேலை. அதை நடத்துவதற்கு திடம் வேண்டும். அதனல்தான் ஒவ்வொரு சர்க்காரும் சட்டத்தின் மேல்எழுந்தவை என்பது சம்மதிக்கப்பட்ட விவகாரமாயினும், சட்டத்துக்குப் பின்புறமாக கத்தி கப்டா ஒளிந்து நிற்பது அவசியமாகிறது.

குறிப்பிட்ட சர்க்கார் தனி மனிதன் வாழ்வில் தலையிடுவது தனி மனிதனுக்கு சொத்துரிமையை அளிக்கும் ஒரு சமுதாயத்தில் மிகவும் அவசியம். சொத்துரிமையை தனி மனிதனுக்கு வழங்கும் சமுதாயத்தில் வாழும் மனிதர்களில் பெரும் பகுதியினர் அன்ன விசாரத்தில் ஈடுபடுவதையே பிரதான காரியமாக நடத்திவரவேண்டி யிருக்கிறது. இந்தத் தொந்திரவு தனி மனிதனுடைய தோளிலிருந்து அகற்றப் பட்டுவிட்டால், அவனுடைய மனேசக்திகள் யாவும், பிரயோஜனப்படக்கூடிய வேறு எத்தனையோ காரியங்களில் ஈடு படுத்தப்பட முடியும். இது ஓரளவு சாத்தியம் என்பதை நிரூபித்துவிட்டது ஸோவியத் ரஷ்யா. ஆனல் ஹாடன் என்ற மனித வரலாற்று நூல் சாஸ்திரி அபாயமும் பசியுமே மனிதனுடைய தீட்சண்யத்துக்கு அவசியமான சாணைக்கல் என்று

சொல்லுகிறார். உண்மையில் ஆபத்து இல்லாவிட்டால் மூளை மந்தித்துப் போகாது; பசித் தேவைகளைப்போல வேறு எத்தனையோ தேவைகள் உண்டு.

நிற்க, தற்காலத்தில், வாழ்வில் யந்திரம் புகுந்துவிட்டது. அதனால் சர்க்காரின் பொறுப்புகள் யாவும் பெருகி வருகின்றன. சுகாதார நிர்வாகம் முதல் சுங்கவரி விதிப்புவரை பல வேலைகளை செய்யவேண்டியிருக்கிறது. தவிர, சம்பள வரம்பு, வேலை நேரம், தனி மனிதன் சுயமாக நீதி வழங்கும் முறையில் கொலைத் தொழிலில் ஈடுபடாது தடுத்தல், அவசியமானபோது புதுத் தொழில்களுக்கு கைகொடுத்து வளர்த்தல், கடைசியாக ஒரு சமுதாயத்தில் வாழும் மனிதனுடைய செல்வ வரம்பை அதிகமாக வளரவிடாமல் பார்த்துக்கொள்ளுதல் முதலிய காரியங்களையும் செய்கிறது. இது தவிர நாணய பரிவர்த்தனை, அயல் நாட்டுச் சரக்குகள் வரவுக்கு வசதி செய்தல், தடுத்தல் முதலிய வேலைகளையும் கவனித்துக்கொள்ளவேண்டும் என்ற பொறுப்பு ஏற்படுகிறது. இந்த நிலையில்தான் தனி மனிதன் செய்யும் பல காரியங்கள் சர்க்காரின் நேர்முகமான வரம்புக்குள்ளாக வேண்டியிருக்கிறது. தனி மனிதனுக்கு சொத்துரிமை தந்து யந்திர வசதியில் அகப்பட்டுக்கொண்டு அதில் ஒருமைப்பாடு காணும்படி அதை உபயோகிக்க வகை தெரியாமல் தவிக்கும் சமுதாயமே முதலாளித்துவ சமுதாயம் என்று சொல்லவேண்டும். யந்திரத்தை உபயோகித்து, சர்க்காருக்கு சமமாக செல்வம் பெற்று அதைத் தன் வசப்படி ஆட்ட தனி மனிதனுக்கு வசதி யளிப்பது இதுதான். இது ஜனங்களின் சம்மதத்தின்பேரில் எழுந்த ஆட்சியாக

இருக்குமாகில் அமெரிக்க ரக ஜனநாயகமாக இருக்கும்; ஜனங்களின் சம்மதிப்பு உதாசீனம் செய்யும் ஒன்ருக இருந்தால், ஜெர்மன் இத்தாலிய ஏக தர்பாராக விடியும். ஒன்றில் அடிமை வரம்பில் நின்று மேலெவ்வவொட்டாத சம்பள வாழ்வு சம்பவிக்கும் மற்ருென்றில் அடிமைத்தனம் சம்பவிக்கும். சர்க்காரை இவ்வாறு கவந்தராசியாகவே வைத்திருப்பதிஞல்தான், தனி மனித வாழ்வு திரணமாக மதிக்கப்படுகிறது.

தனி மனிதனுக்குடைய சமாஜ பந்தத்தை சொத்துரிமையைக் கொண்டு கணிக்காமல், அன்ன விசாரத்தைப் போக்கிவிடும் ஒரு சமுதாயக் கோப்பானது, ஆளும் ஸ்தாபனத்துக்கு வரம்பற்ற அதிகாரத்தை அளித்துவிடுகிறது. ஆதிக்க உரிமை, மக்களிடமிருந்து அகற்றப்பட்டு சமாஜம் முழுவதுமே ஏககுடும்பம் மாதிரி பாவிக்கப்படுவதிஞல், ஒரு விவகாரம்பற்றி இரண்டுவிதமான நிலைகள் ஏற்படாதபடி போக்கில் மாறுதலையே அசாத்தியமாக்குகிறது; ஆகையால், சில குறிப்பிட்ட பெரிய தொழில்களை மட்டும் சர்க்கார் வசம் விட்டுவிட்டு, சமுதாயத்தின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து விளைவிக்காத ரீதியில் மற்றவற்றில் ஈடுபட தனி மனிதனுக்கு கொடுக்கலாம். அதன்மூலம் முதலாளித்துவம் என்ற "சொத்துரிமை மகோதரம்" தோன்ருமல் தடுத்துக் கொள்ளுவதுடன், தனி மனித இச்சா உரிமையின் மூலம் கிடைக்கும், நற்பலன்களையும் பெற்று அனுபவிக்க வசதியுண்டு எனவும் ஒரு நிலை வாதிக்கப்படுகிறது. ஏற்றத்தாழ்வு என்பது சாதாரண உரிமைகளில், இல்லாதபடி பார்த்துக்கொண்டால்தான்

மனிதவம்சம் விருத்தியடைய வகையுண்டு. அரசியல் கட்டுக்கோப்பு சாஸ்திரத்தில் லட்சியத்துக்கு இடமே கிடையாது என்றாலும், குறிப்பிட்ட நோக்கத்தைக் கொண்டு ஒரு கட்டுக்கோப்பை வகுக்குமுன் அதன் வரம்புகளுக்கு அப்பாற்பட்டுள்ள காரியங்களையும் கவனிப்பது அவசியம்.

தனி மனிதனை பிரஜையாக்குவது அதாவது அரசியல் பிராணியாக்குவது அவசியம். அதற்கு சாதனமாகக் கல்வித்துறை உபயோகப்படுத்தப்பட வேண்டும். உரிமைகளின் பிரக்ஞை ஏற்படுவதுடன் கடமை என்ற மனப் பக்குவமும் சமமாக வளர வகை செய்யும் சாதனமே கல்வி. இதற்குப் புறம்பாக, மனிதனை ஒரேயடியாக ஆளும் யந்திரத்தின் சூத்திரப்பாவையாக்குவதோ அல்லது, சுயநிர்ணய உரிமையை மட்டும் கொடுத்துவிட்டு அவனிடம் எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள் கற்பிக்கப்படாதிருப்பதோ குறிப்பிட்ட சமாஜத்தை அரசியல் விகாரங்களில்தான் கொண்டு போய்விடும்.

மக்களின் சம்மதத்தில் அமைந்த சர்க்கார் எதிரெதிராக இரண்டுவிதமான போக்குகளை இயங்க விட்டு, அவற்றின் மோதலில் விளையும் ஒருமைத் தன்மையை லட்சியத்தின் திசைநோக்கியாக ஆக்கி, அதில் பிரஜைகளை ஈடுபடுத்த முயலுகிறார்கள். அதாவது ஆளும் ஸ்தாபனம் கட்டுப்பாட்டையும், தனி மனிதன் இச்சா கிரியைகளையும் தன் தன் போக்காகக்கொண்டு இயங்குகையில் நிகழும் மோதல், லட்சியம் என்று சம்மதிக்கப்படும் ஒன்றின் திசையில் அமையவேண்டும் என்பது மக்களாட்சியின் பெருநோக்கு.

இதற்குமாறாக, தனி மனிதனை சிந்தனை செய்யாப் பாவையாக்கி, சமாஜம் செல்லும் திசையிலேயே தனி மனித மனப்போக்கையும் கட்டிப்போட்டு விடுவதுதான் எதேச்சாதிகார ஆட்சி. இவ்விரண்டு வகையான பரிசீலனைகளும் இதுவரை மனித நலத்துக்கு பூர்ண பொருத்தத்துடன் வேலைசெய்தே வந்திருக்கின்றன என்று சொல்லமுடியாது.

ஏகாதிபத்தியம்: சர்வதேசீயம்

ஜீவராசிகளிலே, தன் ஜீவியத்துக்காக, மற்றொன்றின்மீது பற்றிக்கொண்டு அதன் வலுவை உறிஞ்சிப் பிழைக்கும் ரகம் ஒன்று உண்டு. அதற்குப் புல்லுருவி என்பார்கள். மனித வம்சத்திலும், அதைப்போலவே பிற சமுதாயத்தின் வளத்தை உண்டு அதன் விளைவாக ஒரு குறிப்பிட்ட சமுதாயம் தனது ஸ்திரத்தன்மைக்கு வகைதேடிக் கொள்ள வகுத்துக்கொள்ளும் ஒரு ஏற்பாடே இந்தப் புல்லுருவிராசி. இதற்கு ஏகாதிபத்தியம் என்று பெயர். குறிப்பிட்ட ஒரு சமுதாயமானது தன்வசம் உள்ள ராணுவ பலத்தாலோ, அல்லது, செல்வ வசதியினலோ அல்லது, பொருள் உற்பத்திச் சாதன வசதியாலோ தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் தனது எல்லைக்கு அப்பாற்பட்ட பல பிராந்தியங்களை சிக்க வைத்துக்கொண்டு அவற்றின்மீது ஜீவிக்கும் போது, தனி மனிதனுடைய உரிமை எவ்வாறு, மக்கள் ஆட்சியின்கீழ் அல்லாத ஒரு சமுதாயத்தில் பறிபோகிறதோ, அதேமாதிரி, சிக்கிய பிறநாடுக்கு உள்ள ஆதிபத்திய உரிமையும் பறிபோகிறது. ஏகாதிபத்தியம் என்பது குறிப்பிட்ட சமுதாயமானது தனது நலத்தையே பிரதானமாகக்கருதி பிறநாடுகளில் பாதுகாப்பு நிர்வாக விஷயங்களில் தலையிட்டு, அவை

வரம்பு மீறி தொய்ந்து விழுந்து விடாமலும், தன்னல் சமாளிக்க முடியாத சக்தி பெறும்படி வளர்ந்து விடும்படி அனுமதியாமலும் சாக்கிரதையாக குறிப் பிட்ட தெம்புடன் சாசுவதமாக தான் வசம் "உறவு" கொண்டிருக்க வைக்கிறது. இம்மாதிரி யான ஆட்சி வகையை மேற் கொண்ட சமுதாய மானது, தன் வரம்புக்குள் தனியரசாக இருப்பது பழைய வழக்கம். மக்களரசாகி இருப்பது இன்று நாம் பார்க்கும் காரியம். விழுந்த பிரான்ஸ் விடாப் பிடியாக தன் காலனிகளை தன் வசமே பற்றிப் பிடிக்க பாத்யதை கொண்டாடி வருவதைப் பார்த் தால், தனியாட்சியுள்ள ஏகாதிபத்தியத்தைவிட, இது கடுமையானது என்று படுகிறது. ஆனல் இதைவிட படுமோசமானது தனது அணுக்களின் முழுச் சேர்க்கையுடன் பரிணமித்து, ஒரு சமாஜம் முழுவதுமே, ஒரு பெரிய ஜீவராசி மாதிரி, மற்ற நாடுகளில்மீது படர்ந்து, அவற்றை உறிஞ்ச ஆரம் பிக்குமாகில், அது இன்னும் பெரிய கோர நோயாக தலை தூக்கக்கூடும். ஏகாதிபத்தியம் என்பது, குறிப்பிட்ட சமுதாயத்தின் பேய்ப்பசியைத் தான் காட்டுகிறது. தன் நாளங்களில் ரத்தம் ஓடுவதற் காக, வெளி ரத்தத்தை உண்டு வாழ்வதையே பிரதான கருத்தாக ஒரு சமாஜம் கொண்டிருந்தால் ஆதிக்க வேட்டை என்ற அங்காடியில் ஏற்படும் அடிதடி இரைச்சல், சரித்திரத்தை, அவ்விரைச்சலின் எதிரொலிச்சான் கோயிலாக ஆக்கி விடுவது நிச்சயம்.

இதற்கு மாற்முக சிலர் ஒரு சிகிச்சை கூறுகிருர் கள். இன்றைய தேதிவரை மனித சமூகம், குறிப்

பிட்ட வட்டாரங்களுக்குள் ஸ்திரத்தன்மைக்கு அவசியமான அளவு அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டிக்கொண்ட ஆட்சித் திடல் மிகுந்த, ஆனால் பரஸ்பர இணைப்பு அற்ற கானகமாகவே பூப்பரப்பு அமைந்திருக்கிறது; தனி மனிதன் எவ்வாறு தனது உரிமையைத் 'தியாகம்' செய்து தன்னின வகைக்குள் ஒழுங்கை நிலைநாட்டிக் கொண்டானோ அதேமாதிரி ராஜாங்கங்களும் தம் பூர்ண ஆதிபத்திய உரிமையில் ஒரு சிறு பகுதியை திரஸ்காரம் செய்து உலகப் பொது ஒழுங்கை வகை செய்ய வேண்டும் என இவர்கள் சொல்லுகிறார்கள். இது வட்டார ரீதியாக ராஜாங்க கூட்டுறவுகளாகவும், பிறகு, அவற்றிற்கிடையே தோன்றும் ஒருமைப்பாடாகவும் அமைக்கக்கூடிய தீர்க்கபுத்தி ஏற்பட்டு வரும்போதுதான் ஆதிக்க வேட்டையின் மாறுபெயரான யுத்தம் ஓயும். யுத்தம் நிற்பது என்பதின் தெளிவான பொருள் என்னவென்றால், தனி மனிதன் தன்னிடம் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ளக்கூடாது என்று ஒரு சமாஜத்தின் நிர்வாகம் கருதுகிறதோ அவ்வாறெல்லாம் தானும் பிறநாட்டு ராஜாங்க ஸ்தாபனங்களுடன் எல்லாம் நடந்து கொள்ளுவதில்லை என்று சம்மதித்து வடுப்படாத தனது ஆதிபத்திய உரிமையில் ஒரு பகுதியை இழக்கத் தயாராக இருக்கவேண்டும் என்பதே யாகும். அவ்வாறு செய்வதால் நாட்டில் உள்ள செலவு இனத்தில் பெரும்பகுதி குறைந்துவிடும். இவ்வாறு மனித சமுகத்தின் கழுத்தில் உள்ள பளு குறைவதால் மனித வம்சம் நசித்துப் போகாதிருக்க, அது செய்ய வேண்டிய, இன்னும் கவனிக்கப்படாதிருந்துவரும்

பல காரியங்களுக்கு அவகாசமும் வசதியும் கிடைக்கும். ஆனால் யுத்தத்தின் மூலம் உலகவம்ச ஒழுங்கை நிலைநாட்டிக்கொள்ளுவது என்பது பிராந்தி மயக்கம் தீர மீண்டும் பிராந்திகுடிப்பதுதான்.

அமெரிக்கா தலையிடுமா?

(எஸ். எஸ். மாரிசாமி)

ஜனநாயக பேரிகை கொட்டி அட்லாண்டிக் சாஸன மகாத்மியத்தைப் பற்றி தம்பட்டம் அடித்துவரும் சர்ச்சில் இந்தியாவைப் பற்றி என்ன நினைக்கிறார்? அவரது சர்க்காரின் குட்டி குளுவான்களும் என்ன நினைக்கின்றன? இதே சமயத்தில் அமெரிக்க பேராசியர்களும் தலைவர்களும் இந்தியா பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள்? இந்திய ராஜீய முட்டுக்கட்டையை சதா, ஓயாமல் கவனித்துக் கொண்டே வரும் அமெரிக்க ராஜாங்க இலாகா, ரூஸ்வெல்டை இந்தியா விஷயத்தில் தலையிடும்படி தூண்டுமா? ரூஸ்வெல்டும் தலையிடுவாரா? அமெரிக்காவுக்கு இவ்வாறு தலையிடும் வழக்கம் இருந்ததுண்டா? தலையிடும்படி யாரும் கேட்டதுந்தான் உண்டா? அப்போது அமெரிக்கா என்ன விதமாக நடந்து கொண்டது?

இந்த விதமான கேள்விகளுக்கு சர்வ தேச சரித்திர சான்றுகளுடன் ஆணித்தரமான பதில்களை அளிக்கும் நூல்.

தனிப்பிரதி விலை 10 அணா.

தமிழ் நாடு பிரசுரம் கம்பெனி

2-ஏ, பூந்தமல்லி ஹைரோட், பி. டி., சென்னை

தமிழர் கண்ட ஜவாஹர்

(ரா. கிருஷ்ணசாமி)

பண்டித ஜவாஹர்லால் நேரு இந்திய சுதந்திரத்தின் சின்னம். சுதந்திரத்தை அடைய மகத்தான தியாகங்களை செய்தவர்—செய்து வருபவர். காந்திஜிக்கு அடுத்தபடியாக உலகம் அறிந்த உத்தமர். கோபமும் படபடப்பும் கொண்டவர். பண்டித ஜவாஹரைப்பற்றி இந்திய மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் இவைதான்.

அன்பும் கருணையும் நிறைந்த உள்ளம். பச்சிளம் குழந்தைபோன்ற சுபாவம். நண்பர்களிடமும் சகாக்களிடமும் மாருத பாசம். பொறுமையே பூஷணமாகக்கொண்ட புண்ணிய புருஷர். இவ்வுயரிய குணங்களை பண்டித ஜவாஹர்லால் நேரு, 1936-ம் ஆண்டில், காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம்செய்த போது, தமிழ் மக்கள் நேரில் காணும் பாக்யத்தைப் பெற்றனர்.

அந்த சுற்றுப் பிரயாணத்தின்போது நிகழ்ந்த பல ரஸமான—முக்கியமான சம்பவங்களை ஸ்ரீ ரா. கிருஷ்ணசாமி இந்நூலில் சரளமான நடையில் எழுதியிருக்கிறார். நூலைப் படிக்கும்போது அன்று நடந்த சம்பவங்களெல்லாம் நம் கண்முன் வந்து நிற்கின்றன.

விலை 10 அணு

தமிழ் நாடு பிரசுரம் கம்பெனி

2-ஏ பூந்தமல்லி ஹைரோட், பி. டி., சென்னை

ஜப்பானின் ரகசிய திட்டங்கள்

[ஆர். வேங்கடராஜுலு]

ஜப்பான் திடீரென்று யுத்தத்தில் குதித்தது. மளமளவென்று பல நாடுகளையும் பிடித்தது. ஆனால் ஜப்பானுக்கு இந்த முயற்சியும் ஆசையும் திடீரென வந்தனவா? பல வருஷங்களுக்கு முன்னாலேயே திட்டம் போட்டுக்கொண்டே ஜப்பான் இப்போரில் இறங்கியது. இதுவரை பிடித்த நாடுகள் போதும் என்ற எண்ணமாவது ஜப்பானுக்கு உண்டா? அதுவும் இல்லை என்பதை ஜப்பான் வைத்திருக்கும் ரகசிய திட்டம் தெளிவாக காட்டுகிறது.

அந்த திட்டம் என்ன? எங்தெந்த நாடுகளை எப்படி யெப்படி பிடிக்கவேண்டுமென்று ஜப்பான் ஏற்பாடு செய்திருந்தது என்பதை இந்த ரகசிய திட்டம் வெளிப்படுத்துகிறது. அந்த திட்டத்தின் விவரத்தைக் கொண்டதே இப்புத்தகம். விரைவில் இப்புத்தகம் வெளிவருகிறது.

விலை ரூ. ஒன்று

தமிழ் நாடு பிரசுரம் கம்பெனி

2-ஏ, பூந்தமல்லி ஹைரோடு

பி. டி., சென்னை

Cover Designed & Printed at P. A. S. Press
Post Box 349 - Mount Road - Madras